# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2021 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம்*

---

*(2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2021, சனவரி மாதம் 22 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2021 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம்*

*[2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.- ஓ. 45/2016*

## *(14 ஆம் அத்தியாயமான) சான்று கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1.*** *இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* *சுருக்கப்பெயர்*

***2.*** *(இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (14 ஆம் அத்தியாயமான) சான்று கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் எடுத்துக்காட்டு (ஆ) இல் ''இராணிக்கெதிராகப் போர் புரிந்ததாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குடியரசுக்கெதிராகப் போர் புரிந்ததாக" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.* *14 ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான எடுத்துக்காட்டில், "இராணிக்கெதிராகப் போர் புரிவதற்கான சதியொன்றில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "குடியரசுக்கெதிராக போர்புரிவதற்கான சதியொன்றில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.* *முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***4.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-* *முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்*

*(1) ''ஐக்கிய இராச்சியப் பாராளுமன்றத்தின்'' என்னும் சொற்களிலிருந்து தொடங்கி "ஏதேனும் கூற்று இயைபான நிகழ்வாகும்'' வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ''இலங்கையின் ஏதேனும் வெளிநாட்டுச் சட்டங்களில் அல்லது இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் காணப்படுகின்ற இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் பிரகடனத்தில் அல்லது*

அறிவிப்பில் அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் ஏதேனும் அலுவலகமுறையான வெளியீட்டில் காணப்படுகின்ற அத்தகைய ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் ஏதேனும் பிரகடனத்தில் அல்லது அறிவிப்பில் அடங்கியுள்ள விளக்கவுரையில் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று இயைபான நிகழ்வாகும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில், ''ஏதேனும் ஐக்கிய இராச்சிய சட்டத்தில், சட்டவாக்கத்தில் அல்லது அறிவிப்பில் அடங்கியுள்ள'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் சட்டவாக்கத்தில் அல்லது அறிவிப்பில் அடங்கியுள்ள'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் பந்தியில், ''இலங்கையின் எப்பாகத்திலேனும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் எப்பாகத்திலேனும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் பந்தியில், ''மாட்சிமைதங்கிய இராணியின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படைக்கான போர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் தரைப்படை, கடற்படை அல்லது வான்படைக்கான போர்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் பந்தியில் -

(i) ''இலங்கைப் பாராளுமன்றத்தினதும் சட்டவாக்க மன்றத்தினதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இலங்கைச் சட்டவாக்கமன்றத்தின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ii) "விளக்கம்" என்னும் சொல்லிலிருந்து தொடங்கி "(உ) வட அயர்லாந்தின் பாராளுமன்றம்; என்பவற்றை உள்ளடக்கும்" வரையிலான சொற்களை விட்டுவிடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (5) ஆம் பந்தியில், "இலங்கையினதும் ஐக்கிய இராச்சியத்தினதும் அப்போதைக்கான இறைகள் பதவிக்கு வந்தமை மற்றும் அரச ஒப்பக்குறி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் குடியரசின் பொது இலச்சினை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) அப்பிரிவின் (6) ஆம் பந்தியில், "ஆங்கில நீதிமன்றங்கள் நீதிநெறிக் கவனத்துக்கெடுக்கும் எல்லா இலச்சினைகளும்; இலங்கையின் எல்லா நீதிமன்றங்களினதும் இலச்சினைகளும்; இலங்கையின் கடற்படைசார் மற்றும் கடல்சார் நியாயாதிக்கம்கொண்ட நீதிமன்றங்களினதும் பிரசித்த நொத்தாரிசுகளினதும் இலச்சினைகளும்; அத்துடன் எவ்விலச்சினைகளைப் பயன்படுத்துவதற்கு எவரேனுமாளுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஏதேனும் பாராளுமன்றச் சட்டத்தால் அல்லது இலங்கையில் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வெல்லா இலச்சினைகளும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் எல்லா நீதிமன்றங்களினதும் பிரசித்த நொத்தாரிசுகளினதும் இலச்சினைகளும்; அத்துடன் எவ்விலச்சினைகளைப் பயன்படுத்துவதற்கு எவரேனுமாளுக்கு இலங்கையின் சட்டவாக்கமன்றத்தின் அல்லது ஏதேனும் வெளிநாட்டுச் சட்டவாக்க மன்றத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டவாக்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வெல்லா இலச்சினைகளும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அப்பிரிவின் (7) ஆம் பந்தியில், "இலங்கையின் ஏதேனும் பாகத்தில் ஏதேனும் பகிரங்கப் பதவியை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் ஏதேனும் பாகத்தில் ஏதேனும் பகிரங்கப் பதவியை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(7) அப்பிரிவின் (8) ஆம் பந்தியில், ''மாட்சிமைதங்கிய இராணியால் அங்கீகரிக்கப்பட்ட அரசு அல்லது இறை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைக் குடியரசினால் அங்கீகரிக்கப்பட்ட அரசு அல்லது இறை'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(8) அப்பிரிவின் (10) ஆம் பந்தியில், ''மாட்சிமைதங்கிய மகாராணியாரின் மண்டலங்களும் ஆள்புலங்களும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஆள்புல எல்லைகளும் அதன் பிரிவுகளும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(9) அப்பிரிவின் (11) ஆம் பந்தியில், ''மாட்சிமைதங்கிய மகாராணியாருக்கும் ஏதேனும் அரசுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்குமிடையே'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கைக் குடியரசுக்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்குமிடையே'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(10) அப்பிரிவின் (12) ஆம் பந்தியில், ''வழக்குரைஞர்களதும், வழக்கறிஞர்களதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சட்டத்தரணிகளதும்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (6) ஆம் பந்தியில், ''இலங்கையில்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''இலங்கையில்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவானது, அப் பிரிவிலுள்ள ''ஐக்கிய இராச்சியத்தில் எழுதி நிறைவேற்றப் பட்டுள்ளது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் வெளிநாட்டில் எழுதி நிறைவேற்றப்பட்டுள்ளது'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட் பந்தியில், "இலங்கையினது, அல்லது மாட்சிமைதங்கிய இராணியின் ஆள்பிரதேசங்கள் அத்துடன் ஆள் புலங்களினது அல்லது ஒரு வெளிநாட்டினது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கையினது அல்லது ஒரு வெளிநாட்டினது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "இலங்கையில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "இலங்கையில்" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (1) ஆம் பந்தியில், "இலங்கை அரசாங்கத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கை அரசாங்கத் தின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் பந்தியில், "மாட்சிமைதங்கிய மகாராணியால் அல்லது கோமறைக் கழகத்தால் அல்லது மாட்சிமைதங்கிய மகாராணியின் அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பிரகடனங்கள், கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் - இலண்டன் வர்த்தமானியில் அல்லது இலங்கை வர்த்தமானியில் அடங்கியுள்ள அல்லது மகாராணியின் அச்சிடுநரால் அச்சிடப்பட்டதாகக் கொள்ளப்படும் பிரதிகள் அல்லது பிரித்தெடு பகுதிகள் மூலம்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சனாதிபதியால் அல்லது எவரேனும் அமைச்சரினால் அல்லது அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பிரகடனங்கள், கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் - இலங்கை வர்த்தமானியில் அடங்கியுள்ள பிரதிகள் அல்லது பிரித்தெடுபகுதிகள்மூலம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், ''இலங்கையின் பொதுச் சட்டவாக்கத்தில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கையின் பொதுச் சட்டவாக்கத்தில்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (5) ஆம் பந்தியில், ''இலங்கையிலுள்ள மாநகரக் குழுவொன்றின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கையிலுள்ள மாநகரக் குழுவொன்றின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், ''பிரித்தானிய கொன்சுல் அல்லது இராசதந்திர முகவர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கையின் எவரேனும் தூதுவர், உயர்ஸ்தானிகர் அல்லது வேறு இராசதந்திர முகவர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள ''இலங்கையில் எவரேனும் அலுவலரால் உரியவாறு சான்றுபடுத்தப்பட்டதெனக் கொள்ளப்படுவதுமான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கையில் எவரேனும் அலுவலரால் உரியவாறு சான்றுபடுத்தப்பட்டதெனக் கொள்ளப் படுவதுமான'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவைத் திருத்துதல்

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள ''இலண்டன் வர்த்தமானி'' என்னும் சொற்களிலிருந்து தொடங்கி ''தனிநபர் சட்டமொன்றின் பிரதியொன்று எனக் கொள்ளப் படும்''வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ''இலங்கை வர்த்தமானி எனக் கொள்ளப்படும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவை நீக்குதல்

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "பிரித்தானிய கொன்சுல், அல்லது மாட்சிமை தங்கிய இராணியின் பிரதிநிதி, அல்லது இலங்கை மகாதேசாதிபதி முன்னிலையில் அல்லது அவரால், அல்லது இந்திய அரசாங்கத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் தூதுவர், உயர் ஸ்தானிகர் அல்லது வேறு இராசதந்திர பிரதிநிதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "மாட்சிமை தங்கிய இராணியின்" என்னும் சொற்களில் தொடங்கி "இந்திய அரசாங்கத்தால்"வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "இலங்கைக் குடியரசல்லாத ஏதேனும் நாட்டின் ஏதேனும் நீதித்துறைப் பதிவேட்டின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியெனக் கொள்ளப்படும் ஏதேனும் ஆவணம் சான்றுபடுத்தப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் முறை, நீதித்துறைப் பதிவேடுகளின் பிரதிகளைச் சான்றுபடுத்துவதற்கு இலங்கைக் குடியரசின் எவரேனும் பிரதிநிதியால் சான்றுபடுத்தப்பட்ட ஏதேனும் முறையில் ஆவணம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90அ என்னும் பிரிவு, "கம்பெனி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 90அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

> "கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90ஆ என்னும் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "இலங்கையினுள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இலங்கையினுள்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 90ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான விதிவிலக்கு 2 இலுள்ள "இலங்கையில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இலங்கையில்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 91 ஆம் பிரிவைத் திருத்துதல்*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "இலங்கையில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "இலங்கையில்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 111 ஆம் பிரிவானது, அப்பிரிவுக்கான எடுத்துக்காட்டில், "வழக்கறிஞர் ஒருவருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தரணி ஒருவருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவானது, அப்பிரிவில், "வழக்குரைஞர், வழக்கறிஞர்" என்னும் சொற்கள்காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "சட்டத்தரணி" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவானது, அப்பிரிவில், "வழக்குரைஞர்கள், வழக்கறிஞர்கள்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "சட்டத்தரணிகள்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவானது, அப்பிரிவில், "வழக்குரைஞர், வழக்கறிஞர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "சட்டத்தரணி" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "மாட்சிமை தங்கிய மகாராணியின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அரசின்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 149 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 149 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவுக்கான எடுத்துக்காட்டு (அ) இல், "ஒரு வழக்குரைஞருக்கு ஒரு வழக்கறிஞரால் அறிவுறுத்தப் படுகின்றது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு சட்டத்தரணிக்கு அறிவுறுத்தப்படுகின்றது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான எடுத்துகாட்டு (ஆ) இல், "ஒரு வழக்கறிஞர்" மற்றும் "வழக்கறிஞர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, முறையே "ஒரு சட்டத்தரணி" மற்றும் "சட்டத்தரணி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவானது, அப்பிரிவில், "வழக்குரைஞர் அல்லது வழக்கறிஞர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "சட்டத்தரணி" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**26.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*